**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S.25/2020**
**நாள்.07.07.2023**
**வா.சா.1- கங்கம்மாள்**
**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் கூலி வேலை செய்து வருகிறேன். நான் எனது கணவருடன் வசித்து வருகிறேன். எனது மாமனார் ராசு எங்களுடன் தான் வசித்து வந்தார். எனது கணவர் முருகன் மற்றும் அவரது சகோதர்கள், எனது மாமனார் ராசுவிடம் இருந்து தான் வழக்கு சொத்துக்களை கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான். ராசுவின் மனைவியும், மற்ற கிரையதாரர்களின் தாயாருமான ராஜம்மாளின் தாயார் சின்னம்மாளுக்குரிய சொத்து என்று தான் எனது நிரூபணவாக்குமூலத்திலும், பிராதிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சின்னம்மாளின் கணவர் பெயர் பழனி. அவரை ராமசாமி என்றும் அழைப்பார்கள். ராமசாமி என்ற பழனியின் தகப்பனார் பெயர் தெரியாது. வா.சா.ஆ.4 பட்டாவில் பழனி மனைவி சின்னம்மாள் என்று உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து சின்னம்மாளுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பது பற்றி வழக்குரையிலும், நிரூபணவாக்குமூலத்திலும் பட்டாவை தவிர வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து சின்னமாளுக்கு முன்பு யாருக்கு பாத்தியப்பட்டது என்பதை அறிய வில்லங்க சான்றிதழ் எடுத்துப்பார்த்தேனா என்றால் இல்லை. சின்னம்மாளின் வாரிசு ராஜம்மாள் வழக்கு சொத்தை அனுபவித்து வந்தது குறித்து ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்திருப்பேன். வா.சா.ஆ-4 பட்டாவில் பழனி மனைவி சின்னம்மாள் என்று இருந்ததன் அடிப்படையில் தான் வழக்கு சொத்தை நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். சின்னம்மாளின் கணவர் பழனி என்பவருடன் பிறந்தவர்கள் பற்றிய விபரம் எனக்கு தெரியாது. சின்னம்மாளின் இறப்பு சான்றிதழான வா.சா.ஆ.5 ல் ராமசாமி என்ற பழனி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராசாமி என்ற பழனி என்ற நபர் ஒருவர் கிடையாது என்றாலும், அவர்கள் அண்ணன், தம்பி என்றாலும் சரிதான். சின்ன பெருமாள் என்ற சி.பெருமாள் என்ற பெருமாள் அம்பலத்தின் வாரிசுகள் தான் ராமசாமி, பழனி என்றால் சரிதான். சின்னம்மாளின்

இறப்பு சான்றிதழை யார் வாங்கினார்கள் என்றால் எனது மாமனார் ராசு வாங்கியிருப்பார். சின்னம்மாள் எந்த தேதியில், எங்கு இறந்தார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. வா.சா.சா.ஆ.5 சின்னம்மாளின் இறப்பு சான்றில் இறந்த தேதி 20.06.1989 என்று உள்ளது என்றாலும் பதிவு தேதி 04.07.2012 என்று உள்ளது என்றாலும் சரிதான். சின்னம்மாள் இறந்து 23 ஆண்டுகள் கழித்து யார் தகவல் கொடுத்து யார் கையெழுத்து செய்து இறப்பு சான்றிதழ் வாங்கினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது.

வா.சா.ஆ.5 ஆனது பிரதிவாதிகளிடம் இருந்து வழக்கு சொத்தை மோசடியாக அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நானும், எனக்கு கிரையம் செய்து கொடுத்தவர்களும் சேர்ந்து மோசடியாக உற்பத்தி செய்த ஆவணம் என்றால் சரியல்ல. சின்னம்மாளின் இறப்பு சான்றிதழ் பதிவு செய்யப்படவில்லை என சான்று அளிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்துடன் ராமசாமி என்ற பழனி என்பவர் ஒருவர் தான் என்பதற்காக கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது எதற்காக வாங்கப்பட்டது என்றால் சொத்தை எழுதி வாங்குவதற்காக எனது மாமனாரால் வாங்கப்பட்டது. மேற்படி சான்றிதழை யார் கையொப்பம் செய்து எந்த தேதியில் எங்கு வைத்து வாங்கினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. ராமசாமி என்ற பழனி என்பவர் ஒருவர் தான் என்பதற்காக கிராம நிர்வாக அலுவலர் எந்த சான்றும் வழங்கவில்லை என்றாலும் சொத்தை அபகரிப்பதற்காக மோசடியாக ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. 2019ம் ஆண்டில் எங்களது ஊரில் யார் கிராம நிர்வாக அலுவலராக வேலை பார்த்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. 2019ம் ஆண்டில் எனது ஊரில் ராமச்சந்திரன் என்பவர் கிராம நிர்வாக அலுவலலராக பணி புரிந்தார் என்றாலும் வா.சா.ஆ.1 உடன் இணைக்கப்பட்டுள்ள சான்றில் கையொப்பம் இட்ட செங்கொடி என்பவர் வடமதுரை கிராம நிர்வாக அலுவலராக பணி புரிந்தவர் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்றின் அடிப்படையில் தான் வழக்கு சொத்து கிரையம் வாங்கப்பட்டது என்றால்

சரிதான். எனது பெயரில் வழங்கப்பட்ட வா.சா.ஆ.2 பட்டாவை ஆட்சேபனை செய்து பிரதிவாதிகள் பழனி கோட்டாட்சியருக்கு மனு செய்து என்னை விசாரித்தார்கள் என்றால் இல்லை. பழனி கோட்டாட்சியர் விசாரணையில் கிராம நிர்வாக அலுவலர் சான்று எதுவும் வழங்கவில்லை என தெரிவித்துள்ளார் என்றால் இல்லை. மேற்படி ஆவணங்கள் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்பதால் பழனி கோட்டாட்சியர் உத்தரவின் பேரில் வடமதுரை போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் இல்லை. கோட்டாட்சியர் மற்றும் போலீசார் விசாரணையில் இருந்து தப்பிப்பதற்காக தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சர்வே எண்.453/1, சர்வே எண்.460/1ன் முழு விஸ்தீரணம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் 1 ஏக்கருக்கு சற்று குறைவாக இருக்கும். வழக்கு சொத்தின் நான்கு மால் தெரியும். எனது இடத்திற்கு மேற்கு பக்கம் வெள்ளக்கண்ணு, கிழக்கு பக்கம் சிட்டம்மாள், மூக்கன் அம்பலம், வடக்கு பக்கம் கை வாய்க்கால், தெற்கு பக்கம் மூக்கன் அம்பலம் மகன் சின்னான் அம்பலம் இடம் உள்ளது. நான் தவறாக நான்குமால்களை கூறுகிறேன் என்றாலும், சர்வே எண்.453/1, சர்வே எண்.460/1ல் ராமசாமி மற்றும் பழனி ஆகியோர்களுக்கு ஏக்கர் 1 செண்ட் 20 உள்ளது என்றாலும் சரியல்ல. பழனியின் மனைவி பெயர் பெரிய அம்மணி அம்மாள். ராமசாமி மனைவி பெயர் சின்னம்மாள். மேற்படி ராமசாமி மற்றும் பழனி அவர்களுக்கு பாத்தியப்பட்ட 1 ஏக்கர் 20 சென்டை 1952ம் ஆண்டு ஆளுக்கு 60 சென்ண்ட என வாய்க்கராலாக பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. ராமசாமிக்கு சர்வே எண்.453/1ல் ஒதுக்கப்பட்ட பாகமான 60 செண்ட் நிலத்தை செங்கன் அம்பலம் என்பவருக்கு 1952ல் கிரையம் செய்து கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ராமசாமி கிரையம் செய்த நிலம் பல்வேறு கிரையங்களுக்கு பிறகு 1977ம் ஆண்டு பழனி மனைவி பெரிய அம்மணி அம்மாள் பெயரில் கிரையம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. சர்வே எண்.453/1, சர்வே எண்.460/1ல் உள்ள 1 ஏக்கர் 20 சென்டை பழனியம்பலம், அவரது மனைவி பெரிய அம்மணி அம்மாள் அனுபவித்து வந்து அவர்களது வாரிசான 1ம் பிரதிவாதியின் மனைவியான தனம், 2ம் பிரதிவாதி,

3ம் பிரதிவாதியின் தாயாரான தங்கம்மாள் பெயரில் 1984ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட உயில் எழுதி கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண்.453/1ல் தங்கம்மாள் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னாலும் தற்போது 3ம் பிரதிவாதி மேற்படி வீட்டில் குடியிருந்து வருகிறார் என்று சொன்னாலும் சரியல்ல. 3ம் பிரதிவாதி குடியிருந்து வந்த வீட்டை 2021ம் வருடம் நானும், எனக்கு கிரையம் செய்து கொடுத்தவர்களும் ஆட்களுடன் சென்று வீட்டை அடித்து நொறுக்கியது சம்பந்தமாக புகார் கொடுக்கப்பட்டு, வடமதுரை போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்ததால் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு கூறி அனுப்பிவிட்டார்கள்.

**வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

Digitally signed by
R VANJI NATHAN

**Principal District Munsif**
**Vedasandur**